DINAMALAR

21 DEC 2022

PAGE 3



# கவிஞர் வானவில் ரவியின் படைப்பு புதுச்சேரியில் 100வது கருத்தரங்கம்

**புதுச்சேரி, டிச. 21–**

கவிஞர் வானவில் ரவியின் படைப்புகள் குறித்த 100–வது கருத்தரங்கம் நேற்று நடந்தது.

சென்னையைச் சேர்ந்த கவிஞர் வானவில் ரவி. இவர், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கவிதை எழுதும் புலமை கொண்டவர். கடந்த 40 ஆண்டுகளாக இவர் கவிதை எழுதி வருகிறார். தமிழில் 20, ஆங்கிலத்தில் 5 நூல்கள் எழுதியுள்ளார். இவரது படைப்புகள் பற்றி சென்னை, மதுரை உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும், கேரளாவில் திருச்சூர், எர்ணாகுளம் உள்ளிட்ட பகுதிகளிலும் 98 கருத்தரங்குகள் நடத்தி முடிக்கப்பட்டது. கடந்த 17 ம் தேதி சென்னையில் 99வது கருத்தரங்கம் நடந்தது.




புதுச்சேரி பல்கலையில் நேற்று நடந்த கவிஞர் வானவில் ரவியின் படைப்புகள் குறித்த 100வது கருத்தரங்கினை கவர்னர் தமிழிசை துவக்கி வைத்து,தமிழ் துறையின் செய்தி மடலை வெளியிட்டார். அருகில் அமைச்சர் நமச்சிவாயம், துணைவேந்தர் குர்மீத் சிங்.

நுாறாவது கருத்தரங்கம் புதுச்சேரி பல்கலையில் சுப்ரமணிய பாரதியார் தமிழ் ஆய்வு மையம் மற்றும் பாலக்காடு, தமிழ் பண்பாட்டு ஆராய்ச்சி மையம் சார்பில் நேற்று பல்கலைக்கழக விருந்தினர் மாளிகை விடுதியில் நடந்தது.

துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை தாங்கினார். கவர்னர் தமிழிசை கருத்தரங்கத்தை குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்து, தமிழ் துறையின் செய்தி மடலை வெளியிட்டார்.

அமைச்சர் நமச்சிவாயம், கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ., பாலக்காடு தமிழ் பண்பாட்டு ஆராய்ச்சி மைய இயக்குனர் ராஜாராம், சுப்ரமணிய பாரதியார் தமிழ் ஆய்வு மைய புல முதல்வர் சந்திரிகா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாலக்காடு, தமிழ் பண்பாட்டு ஆராய்ச்சி மையம் சார்பில் கவிஞர் வானவில் ரவின் படைப்புகள்,சாகித்ய அகாடமி, ஞானபீட விருதுகளுக்கு பரிந்துரைக்கப்பட உள்ளது.

DINAMANI

21 DEC 2022

PAGE 12

# இளைஞர்கள் அர்ப்பணிப்புடன் வாழ வேண்டும்

## தமிழிசை சௌந்தரராஜன்

புதுச்சேரி, டிச.20: இளைஞர்கள் சமூகத்துக்கான அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்று புதுவை துணை நிலை ஆளுநர் (பொ) தமிழிசை சௌந்தரராஜன் அறிவுறுத்தினார்.

புதுவை பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஸ்ரீவானவில் கே.ரவியின் 100-ஆவது கருத்தரங்கைத் தொடக்கிவைத்து அவர் பேசியதாவது:

கைப்பேசி குறித்த கவிதையை நடைமுறைக்கு ஏற்ப எழுத்தாளர் ரவி படைத்திருப்பது படிப்போருக்குபயன்தரத்தக்கதாக உள்ளது. கைப்பேசியை உடல் நலம் பாதிக்காத வகையில் பயன்படுத்துவது முக்கியமானதாகும். இளைஞர்கள் சமூகத்துக்கான அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்றார் தமிழிசை சௌந்தரராஜன். கருத்தரங்குக்கு பல்கலைக் கழகத் துணைவேந்தர் குர்மீத்சிங் தலைமை வகித்தார். புதுவை உள்துறை அமைச்சர் ஆ.நமச்சிவாயம் வாழ்த்திப் பேசினார்.

சட்டப்பேரவை உறுப்பினர் கல்யாணசுந்தரம், பாலக்காடு தமிழ் பண்பாட்டு ஆய்வு மைய இயக்குநர் ராஜாராம், சுப்பிரமணிய பாரதியார் தமிழ் ஆய்வு மைய புல முதல்வர் சந்திரிகா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கருத்தரங்கை புதுவை பல்கலைக்கழகத்தின் சுப்பிரமணிய பாரதியார் தமிழ் ஆய்வு மையம், பாலக்காடு தமிழ் பண்பாட்டு ஆராய்ச்சி மையம் ஆகியவை இணைந்து நடத்தின.




புதுவை பல்கலைக்கழகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் விழா மலரை வெளியிட்ட துணைநிலை ஆளுநர் (பொ) தமிழிசை சௌந்தரராஜன். உடன் புதுவை உள்துறை அமைச்சர் ஏ.நமச்சிவாயம், துணைவேந்தர் குர்மீத் சிங் உள்ளிட்டோர்.